# மது குடிப்பதால் ஏற்படும் கேடுகள்

## மதுவின் தீமைகள்

(i) உதாரணத்திற்கு நமது தமிழ்நாட்டில் விருதாசலம் அருகே .....பழங்குடி மக்கள் வசிக்கும் கிராமம் உள்ளது. அந்த ஊரில் மதுவுக்கு அடிமையான சுமார் 35–40 வயதுக்குள் இருக்கும் ஆண்கள் பலர் இறக்கிறார்கள். ஆகவே அந்த ஊரில் பெரும்பான்மையான பெண்கள் கணவனை இழந்தவர்களாகவே இருக்கின்றனர்.

(ii) தங்கள் ஊரில் திறக்கப்படவிருந்த மதுக்கடைகளை எதிர்த்து போராட்டம் நடத்தி, மது உயிரை குடிப்பதால், அங்கு மது கடைகளை நிறுவ வந்த அரசு அதிகாரிகளிடம் தாங்கள் அணிந்திருந்த தாலிகளை எல்லாம் கழட்டிக் கொடுத்து மதுக் கடையை திறக்கவிடாமல் தங்கள் கணவர்களை காப்பாற்றி உள்ளார்கள்.

(iii) நம் தமிழ் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தமிழுக்கு ‘மது’ வென்று பெயர் என்று பாடி வைத்தார். அதனால் தான் என்னவோ மது விரும்பிகள் குறிப்பாக சில கூலித் தொழிலாளிகள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், பட்டியினத்தவர்கள், மற்றும் பழங்குடி மக்கள் மதுவை மிக அதிகமாக அருந்தி தங்கள் வாழ்வினை மரணத்திற்கு விருந்து வைக்கின்றனர்.

(iv)ஊக்கமது கைவிடேல்

“ஊக்கமது கைவிடேல்” - நமது குடிப்பிரியர்கள் ஊக்கம் தரும் மதுவை கைவிடக்கூடாது என்று புரிந்து கொண்டு மேலும் மேலும் மது குடிக்கின்றனர்.

மதுவருந்தி உடல்நலம் கெட்டு - வீட்டு நலம் - தனது குழந்தைகள் நலம் மற்றும் எதிர்காலம் கெட்டு, வெகு விரைவில் மரணத்தை தழுவுகின்றனர்.

தமிழ் நாட்டில் மதுவால் இளம் வயதிலேயே இறந்தவர் ஊருக்கு குறைந்தது 10 - நபர்கள் இருப்பர்.

மது அருந்த பணம் தரவில்லையென்றால் - அப்பா, அம்மா, உடன் பிறப்புகள், நண்பர்கள், மனைவி போன்றோர் கொள்ளப்படுகிறார்கள்.

**மதுவின் தீமைகள் பற்றி மஹான்களின் கருத்து**

**திருவள்ளுவர்**

10 குறள்களில், கள்/மது அருந்துவதால் விளையும் தீமைகள் விளக்கப்பட்டுள்ளன.

v. மகான் / சுவாமி நாராயணகுரு

மது ஒரு விஷம்- மதுவை தயாரிக்காதே! மதுவை விற்காதே!! மதுவை அருந்தாதே!!!




Figure : Consumption of alcohol and its effects according to the quantity taken in.

**படம் –மதுவின் தீமைகள்**